செ.வெ.எண்: 634 நாள்: 31.10.2020

**தமிழகத்தில் கொரோனா பாதிப்பு விகிதம் 4 சதவீதத்திற்கும் கீழ் குறைக்கப்பட்டுள்ளது.**

**தமிழகத்தில் கொரோனா சிகிச்சைகென உருவாக்கப்பட்ட கொரோனா சிகிச்சை மையங்கள் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவால் படிப்படியாக மூடப்படும் நிலைமை உருவாகி உள்ளது.**

**மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்**

---

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் இன்று (31.10.2020) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்குப் பின் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் கொரோனா சிகிச்சைகென உருவாக்கப்பட்ட கொரோனா சிகிச்சை மையங்கள் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவால் படிப்படியாக மூடப்படும் நிலைமை உருவாகி உள்ளது.

மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மட்டுமே கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பிறமாநிலங்களில் கொரோனா நோய் தொற்று அதிகரித்து உள்ள சூழலில் தமிழகத்தில் கொரோனா நோய் தொற்று குறைந்துள்ளது. பண்டிகை காலங்கள், மழைக்காலங்கள் போன்ற இத்தகைய காலக்கட்டத்தில் பொது மக்கள் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைப்பிடித்தல், கைகழுவுதல் போன்றவற்றை தவறாது பின்பற்ற வேண்டும்.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு விகிதம் 4 சதவீதத்திற்கும் கீழ் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் தினமும் 80,000 எண்ணிக்கையில் ஆர்டிபிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காய்ச்சல் முகாம், நேரடி பரிசோதனை போன்றவற்றின் மூலம் கொரோனா பாதிப்பு குறைந்துள்ளது. மழைக்காலத்தில் ஏற்படுகின்ற டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களை கட்டுப்படுத்த அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இதயநோய் சிகிச்சைகென கேத்லேப் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே தமிழகத்தில் ஒரு அரசு பல் மருத்துவக்கல்லூரி உள்ளது. மேலும் புதுக்கோட்டையில் புதிய பல் மருத்துவக்கல்லூரி தொடங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இக்கல்லூரி தொடங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிராமப்புற அரசுப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகள் அரசு மருத்துவக்கல்லூரியில் பயில 7.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆளுநர் ஒப்புதல் பெறப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. சட்ட வல்லுனர்களுடன் கலந்து ஆலோசனை செய்து உரிய நேரத்தில் அனைத்து நடவடிக்கையும் தொடங்கும்.

கடந்த ஆண்டு கணக்கீட்டின் படி அகில இந்திய மருத்துவ ஒதுக்கீடு போக 4,043 எம்பிபிஎஸ் இடங்கள் மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் 303 எம்பிபிஎஸ் இடங்கள் கடந்த ஆண்டு கணக்கீட்டின் படி அரசு பள்ளியில் பயின்ற மாணவ, மாணவிகள் பயன்பெற வாய்ப்பாக அமைந்துள்ளது. மேலும் தற்பொழுது புதிய மருத்துவக் கல்லூரிகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டு வருவதால் வரும் காலத்தில் இதன் எண்ணிக்கை அதிகரிக்கும். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**